கிறது. இதில் பெரிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்கள் என்று அல்ல. தொழில் நிறுவனங்கள் என்றால் அவர்களுக்குச் சலுகை கொடுக்கிறோம், அவர்கள் தொழில்கள் நடத்த வேண்டுமென்பதால். எனவே இதிலே பெரிய நிறுவனங்கள், சிறிய நிறுவனங்கள் என்ற பாகுபாடு இல்லை. எல்லோரிடமும் வசூலிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் யாராவது பெரியவர்களிடமிருந்து வசூலிக்கப்படவில்லை என்று சொன்னால், நாளைக்கே அதற்கு நடவடிக்கை எடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 4, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர்.

4—

தமிழ்நாடு அரசு மத்திய தொகுப்புக்கு அரிசி வழங்கும் விவரம்.

*21696—திரு. கே. கந்தசாமி:

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு அரசு மத்திய தொகுப்புக்கு ஆண்டுதோறும் அரிசி வழங்குகிறதா?

(ஆ) ஆம் எனில், எவ்வளவு?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன், உணவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

திரு. கே. கந்தசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு ஆண்டுதோறும் எவ்வளவு டன் அரிசி கொடுக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு இதுவரை 70,800 டன் மாதந்தோறும் வழங்கி வந்தது. நாம் அதிக அளவிலே குடும்ப அட்டைகள் வழங்கி இருக்கிற அந்தச் சூழ்நிலையில் இன்னும் அதிக அளவில் ஒதுக்கீடு செய்ய வேண்டுமென்று கேட்டோம். சென்ற மாதம் 15,000 டன் அதிகமாக தருகிறோம் என்று சொன்னார்கள். ஆனால்

நேற்று அதை 30,000 டன்னாக உயர்த்தி மார்ச் மாதத்திலிருந்து மாதந்தோறும் 1 லட்சம் டன்னாக வழங்குவதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. ஆனால் அது 4 மாதங்களுக்கு என்று அறிவித்திருக்கிறார்கள்.

முற்பகல் 10-15

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு கூடுதலாகத் தமிழ்நாடு அரசுக்கு அரிசி கொடுத்ததற்காக மத்திய அரசுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். மத்திய அரசு ஒரு கிலோ அரிசி என்ன விலைக்குக் கொடுக்கிறது? மத்திய அரசு கொடுக்கிற அரிசி அனைத்தும் நியாய விலைக்கடைகள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முந்தைய துணைக் கேள்வியே இதற்குத் தொடர்பு இல்லாது வேறு கேள்வியாக இருந்தது. என்றாலும் இதனுடைய தொடர்பாக ஒரு பொது விளக்கத்தை அளித்துவிட வேண்டுமென்றுதான் இதை நான் அளித்தேன். இப்போது நீங்கள் விலைக்குள்ளே நுழைந்தால் அந்த விபரங்கள் முழுவதையும் நான் வைத்திருந்தால்தான் உங்களுக்குச் சரியாகச் சொல்லமுடியும். எனக்கு ஏதோ தெரியும் என்றாலும் சட்டமன்றத்திலே நான் தெரிவிக்கிற போது அரைகுறையாகச் சொல்லமுடியாது. ஆகவே தனிக்கேள்வி போட்டால் அதை நான் தெளிவாகத் தருகிறேன். ஆனால் பொதுவான பதில். மத்திய அரசு தருகின்ற விலையைவிட மிகக் குறைவாகத்தான் இன்றைக்கு நாம் விற்றுக் கொண்டிருக்கிறோம் (மேசையைத் தட்டும் ஒலி) அதைப்போல மத்திய அரசு தருகின்ற அரிசி மாத்திரமல்ல. நமக்கு ஒரு மாதத்திற்கு 1,70,000 டன் தேவைப்படுகிறது. ஆகவே ஒரு லட்சம் டன் மத்திய அரசு தந்தாலும், 70,000 டன்னை நாம் பொதுச் சந்தையிலே- விவசாயிகளிடத்திலேயிருந்து வாங்கித்தான் வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. இரா. தாமரைக்கனி

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1,70,000 டன் அரிசி தமிழகத்திற்குத் தேவை என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் மத்திய அரசு ஒரு லட்சம் டன் அரிசிதான் தருகிறது என்றும் சொன்னார்கள். ஆகவே வேறு மாநிலங்களிலோ, வெளி நாடுகளிலோ அரிசி வாங்குவதற்கு மத்திய அரசை மாநில அரசு கேட்டிருக்கிறதா? அதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறதா? அப்படி அனுமதி கிடைக்காவிட்டால் அரசு மேற்கொண்டு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளது என்பதை அறிய விரும்புகிறேன்.

1994 மார்ச் 17]

மாண்புமிகு திரு. இராம வீரப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்னாலேயே பதில் சொல்லிவிட்டேன். மாண்புமிகு தாமரைக்கனி அவர்கள் மீண்டும் அதை கேட்கிறார். தேவையான அரிசியை இந்த நாட்டிலேயே வாங்கிக் கொள்கிறோம். அதில் ஒன்றும் இப்போது நெருக்கடி இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 5, திருமதி கற்பகம் இளங்கோ, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

5—

காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி அமைத்தல்

*21114— திருமதி கற்பகம் இளங்கோ :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க் காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு, இரத்த சேமிப்பு வங்கி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

காரைக்குடி அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவு மற்றும் இரத்த சேமிப்பு வங்கி அமைக்கும் செயற் குறிப்பு ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

திருமதி கற்பகம் இளங்கோ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்ற இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாக நமது இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பெயரால் ஆரம்பிக்கப்பட்ட புரட்சித் தலைவி மருத்துவ நலத் திட்டம் வெற்றி நடை போட்டு வருகின்ற காலக்கட்டத்தில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்திலே வேகமாகவும் மிகச் சிறப்பு வாய்ந்ததாக வளர்ந்து வருகிற நகரமாகவும் காரைக்குடி விளங்கி வருகிறது. இந்தக் காரைக்குடி நகரத்தில் அவசரச் சிகிச்சைப் பிரிவு இரத்த சேமிப்பு வங்கி இரண்டும் இதுவரை இல்லாதது மிகவும் அவல நிலையாகும். இந்தச் சூழ்நிலையில் ஏதாவது விபத்து ஏற்பட்டாலோ 80 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிற மதுரைக்குக் கொண்டு செல்கிற சூழ்நிலை ஏற்படுகிறது. வழியில் செல்லும்போது விபத்துக் குள்ளான அந்த நபர்கள் இறக்கக்கூடிய வாய்ப்பும் ஏற்பட்டு